# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg


| | |
|---|---|
| பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பவுல் இயோ *fryeopaul@gmail.com* |
| உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | பங்கு அலுவலகம்: *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |


| 22 ஏப்ரல் 2018 | **பாஸ்கா காலம் 4ம் ஞாயிறு** | இரண்டாம் ஆண்டு |
|---|---|---|




அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

# உங்கள் சிந்தனைக்கு

அன்புமிக்க சகோதர சகோதரிகளே!

பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறு, நல்லாயன் ஞாயிறு என்று நம் திரு அவைக் கொண்டாடி வருகிறது. இன்றைய அவசர உலகில் ஒவ்வொருவரையும் வழி நடத்த ஓர் ஆயன் தேவைப்படுகிறார். நமது வாழ்க்கைப் பயணத்தில் யார் நமது ஆயன் என்று சிந்திக்க அழைக்கிறது இந்த ஞாயிறு. மேலும் இந்த நல்லாயன் ஞாயிறு அன்று இறையழைத்தலுக்காகச் சிறப்பாக செபிக்க நமது திருஅவை உங்களை வேண்டுகிறது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள ஒரு செய்தியில், 'நம் சுயநலத்திலிருந்து வெளியேறிச் செல்வதே, நம் அனைவருக்கும் தரப்பட்டுள்ள முக்கியமான மறைபோதகப் பணி" என்று கூறியுள்ளார். சுயநலம் என்ற சுழல் காற்றில் சிக்கி இவ்வுலகம் சின்னாபின்னமாகி வருவதை நாம் அறிவோம். சுயநலமற்ற தலைவர்கள் நம் குடும்பங்களில்தான் உருவாகின்றனர் என்பதை உறுதி செய்தால், இவ்வுலகின் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்பதும் உறுதி.

இயேசு தம்மை ஒரு நல்ல ஆயராக முன்னிலைப்படுத்துகிறார். மந்தையை நன்கு அறிந்த, ஆடுகளுக்காக உயிரைக் கொடுக்கிற, ஆடுகளை முன்னின்று வழிநடத்துகிற பண்புகளை எல்லாம் இயேசு கொண்டிருந்தார். இன்று அத்தகைய பண்புகளைக் கொண்ட ஆயர்கள், குருக்கள், துறவிகளுக்காக நாம் இன்றைய திருப்பலியில் மன்றாடுவோம்.

பிஞ்சு மனங்களில் வெறுப்பு என்ற நஞ்சைக் கலந்து ஊட்டுவது குழந்தைகளுக்கு மிக நெருங்கியவர்களான பெற்றோரும், உற்றாரும் என்ற உண்மை, நம் அனைவரையும் குற்ற உணர்வோடு தலைகுனியச் செய்கிறது. நல்லாயன் ஞாயிறைக் கொண்டாடும் இன்று, நாம் ஒவ்வொருவரும் நாம் வாழும் சூழல்களில் மற்றவர்களை நல்வழியில் நடத்தும் வழிகாட்டிகளாக, நல்ல ஆயர்களாக வாழ்கிறோமா என்ற ஆன்மத் தேடலை மேற்கொள்வோம். பள்ளிப்படிப்பு, கல்லூரிப் படிப்பு ஆகியவற்றை முடித்துவிட்டு, வாழ்வில் சில முக்கிய முடிவுகளை எடுக்கக் காத்திருக்கும் இளையோரை இன்று சிறப்பாக இறைவனின் திருப்பாதம் கொணர்வோம். நல்லாயனாம் இயேசுவின் அழைத்தலை ஏற்று, மக்கள் பணிக்குத் தங்களையே அளிக்க முன்வரும் இளையோரை, இறைவன் வழிநடத்த வேண்டுமென்று, நல்லாயன் ஞாயிறன்று, இறையழைத்தல் ஞாயிறன்று நாம் சிறப்பாக மன்றாடுவோம். நல்வாழ்த்துக்கள்.

# பிறந்த நாள் வாழ்த்துக்கள்!

நமது அன்புத் தந்தை அருட்திரு. நித்திய சகாயராஜ் அவர்கள் தனது **42**வது பிறந்த நாளை
வரும் புதன்கிழமை, **25-04-2018** அன்று கொண்டாடுகிறார்கள்.



தந்தையின் ஆன்மீகப் பணி சிறந்தோங்கவும், உடல் நலமும் பொருள் வளமும்
பெற்று சீரும் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோம்.
பங்குத் தந்தையர் மற்றும் பங்கு மக்கள் அனைவரின் சார்பில்
அருட்தந்தைக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.




# தமிழ் மறைக்கல்வி வகுப்புகள்

நமது ஆலயத்தில் தமிழில் மறைக்கல்வி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாரமும் ஞாயிறு காலை **9:30** மணித் தமிழ் திருப்பலி முடிந்தவுடன் சுமார் **45** நிமிடங்களுக்கு மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறும். நம் பிள்ளைகளுக்கு நன்கு புரியும் வண்ணம் தினசரி செபங்களும், திருப்பலி செபங்களும், பாடங்களும், தமிழில் விளக்கிச் சொல்லித்தரப்பட்டு, புதுநன்மை மற்றும் உறுதிப்பூசுதல் பெற அவர்கள் தயாரிக்கப்படுவர். தமிழ் கத்தோலிக்கப் பெற்றொர்கள் அனைவரும் உங்கள் பிள்ளைகளை தகுந்த வகுப்புக்களில் உடனே பதிவு செய்யும்படி அன்புடன் வேண்டுகிறோம். நன்றி.

# முழு இரவுத் திருவிழிப்புச் செப வழிபாடு

**12-05-2018, சனி, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**

இரவு முழுதும் விழித்திருந்து, நாம் சுமக்கும் பாரங்களை கடவுளிடம் இறக்கி வைத்து, அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

# இடைவிடா சகாய அன்னை நவநாள்

**சனிக்கிழமைகளில் இரவு 8:30 மணிக்கு** தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெறும். அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெற அனைவரும் வருக.

# பொது விடுமுறைத் திருப்பலி நேரம்




**01-05-2018** செவ்வாய் ~ தொழிலாளர் தினம்.

அன்று நம் பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை.

காலை 9 மணிக்கு ஆங்கிலத் திருப்பலி, காலை 10 மணிக்கு தமிழ் திருப்பலி



(மதியம் 12 மணி முதல் நம் ஆலய வளாகத்தின் இரும்புக் கதவுகள் மூடப்பட்டிருக்கும்.)

# ஆண்டவரின் விண்ணேற்றப் பெருவிழா திருப்பலி நேரங்கள்

**09-05-2018**, புதன் ~ மாலை 6:30 மணிக்கு ஆங்கிலத் திருப்பலி, இரவு 8:00 மணிக்கு தமிழில் திருப்பலி

**10-05-2018**, வியாழன் ~ மதியம் 12:30, மாலை 6:30, இரவு 8:00 மணிக்கு ஆங்கிலத் திருப்பலி

திருப்பலியில் கலந்து கொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு முறை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| யை | தை | ந் | த | த் | ஆ | ண் | ம் | ல் | ந |
| டு | ல | ய | த | ழ் | உ | டு | வு | மு | ம் |
| பே | நா | வ | வெ | ட | ன | ளே | க | க் | ம |
| லு | ர | ச | ற் | அ | ரு | ன் | க் | ளை | னா |
| ல | யா | ன் | ரே | ல | தி | வே | டு | சா | ய் |
| கு | தி | நு | பு | த் | ய் | ளூ | கொ | த் | ரூ |
| பெ | மை | றை | ட | சா | து | வி | யூ | தே | யா |
| கே | அ | ட | க | த | லா | யா | ப் | லே | சி |
| க் | ட் | வ | ட் | வி | வ | றை | லி | ற் | மெ |
| க | கா | மே | ரை | ள் | க | ளை | பு | ட் | மீ |

1. நானும் _________ அறிந்திருக்கிறேன்.
2. நாம் கடவுளின் _________ அழைக்கப்படுகிறோம்.
3. இவராலே அன்றி வேறு எவராலும் _________இல்லை.
4. உயிரைக் _________ எனக்கு அதிகாரம் உண்டு.
5. ஏனெனில் அவர் இருப்பதுபோல் _________க் காண்போம்.
6. நல்ல ஆயன் நானே. நானும் என் _________ அறிந்திருக்கிறேன்.
7. கட்டுவோர் புறக்கணித்த கல்லே _________ மூலைக்கல் ஆயிற்று!
8. _________ இயேசுவின் பெயரால் இவர் நலமடைந்து நம்முடன் நிற்கிறார்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதலாம் வாசகம்:** | திருத்தூதர்பணிகள் 4 : 8 – 12 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 118 : 1, 8-9, 21-23, 26,28,29 |
| **பதிலுரை:** | கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்தின் மூலைக்கல் ஆயிற்று! |
| **இரண்டாம் வாசகம்:** | 1 யோவான் 3 : 1 – 2 |
| **நற்செய்தி வாழ்த்தொலி:** | அல்லேலூயா! அல்லேலூயா! நல்ல ஆயன் நானே. நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன். என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா! |
| **நற்செய்தி வாசகம்:** | யோவான் 10 : 11 – 18 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை (ஆங்கிலம்) : | காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) : | காலை 10:00 மணி |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |





தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரிசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் இல்லத்திலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு.